S.C.No. 41/2019
Date : 21.05.2026.
(1, 2 எதிரிகள் ஆஜர்.)

அ.சா .17 பெலிக்ஸ் சுரேஷ் பீட்டர் , த/பெ.ராசையா பீட்டர்

<u>சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு 1வது, 2வது எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை:–</u>

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் போக்குவரத்து நெரிசல் உள்ள இடம் மேலும் பொதுமக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடம் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த சாலையானது திருச்செந்துார் நோக்கி செல்லக்கூடிய ஒரு பிரதான சாலை என்றால் சரியல்ல அது தட்டப்பாறையிலிருந்து புதுக்கோட்டை செல்லும் சாலையாகும். தட்டப்பாறையிலிருந்து புதுக்கோட்டை செல்லும் கிராம மக்கள் அந்த சாலையைதான் பயன்படுத்துவார்கள் என்றால் சரிதான். அந்த சாலையை பயன்படுத்தக்கூடிய அந்த பகுதியிள் உள்ள மக்கள் யாரையும் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதே போல் அந்த பகுதியில் உள்ள மக்கள் யாரையும் பார்வை மகஜரில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அ.சா.8 உங்கள் விசாரணையின் போது பாத யாத்திரையாக வந்தவர்களுள் ஒரு நபர் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். உங்களுக்கு கீழ் பணிபுரியும் ஏதாவது ஒரு காவலருக்கு ஒரு குற்ற வழக்கு சம்பந்தமாக ஏதாவது ஒரு பணி கொடுத்தால் அவர்களுக்கு கடவூச்சீட்டு கொடுக்கவேண்டும் என்றால் சூழ்நிலையை பொறுத்து கொடுக்கப்படும். அந்த கடவூச்சீட்டில் தான் ஒரு என்றைய தேதியில் என்ன பணிக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்ற விபரம் தெரியவரும் என்றால் கடவூச்சீட்டு வழங்கும் பட்சத்தில் அது தெரியவரும். இந்த வழக்கில் யாருக்கும் எந்த விதமாக கடவூச்சீட்டும் வழங்கப்படவில்லை

என்றால் சரியல்ல தடய அறிவியல் அலுவலுக்காக கொடுக்கப்பட்டுள்ளது. அனைத்து பணிகளுக்கும் கடவூச்சீட்டு கொடுத்துள்ளீர் ஆனால் அவை அனைத்தையும் இந்த வழக்கில் தாக்கல் செய்தால் அது இந்த வழக்கிற்கு பாதகமாக அமையும் என்ற காரணத்தினால் நீங்கள் அவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அ.சா 1 , 2, 3, 4, 5, 6, 7 ஆகியோர்களை 06.01.2014 அன்று அரசு மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்துள்ளீர் என்றால் சரிதான். 07.01.2014 ம் தேதி சம்பவ இடத்தில் இருந்து எடுத்த சான்று பொருட்களை ஆய்வகத்திற்கு அனுப்ப நீதிமன்றத்தில் வேண்டுகொள் கடிதம் கொடுத்தீரா என்றால் ஆம்.

2. அருவாள் கைப்பற்றிய இடம் பொதுமக்கள் நடமாட்டம் இல்லாத இடம் ஆகும். அது பொதுமக்கள் நடமாடக்கூடிய ஒரு திறந்தவெளி இடமாகும் ஆனால் அதை சொன்னால் இந்த வழக்கிற்கு பாதமாக அமையும் என்பதால் அது ஒரு பொதுமக்கள் நடமாட்டம் இல்லாத இடம் என்று பொய் சாட்சியம் அளிக்கிறீர் என்றால் சரியல்ல. அது ஓடை கரைகள் சீமைகருவேலை செடிகள் நிறைந்த பகுதியாகும். காயம் பட்ட நபர் அணிந்திருந்த இரத்தகறை படிந்த உடைகள் எதையாகிலும் இந்த வழக்கில் சான்று பொருட்களாக தாக்கல் செய்துள்ளீரா என்றால் அவ்வாறு எந்த ஒரு இரத்தக்கறை படிந்த உடைகளும் எனது விசாரணையில் கிடைக்கப்பெறவில்லை அதனால் தாக்கல் செய்யவில்லை. இரத்தக்கறை படிந்த உடைகளை நீங்கள் கைப்பற்றி உள்ளீர் ஆனால் அது இந்த வழக்கிற்கு பாதகமாக அமையும் என்ற காரணத்தினால் அதை நீங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த டாக்டர் சுப்பையா உங்கள் விசாரணையின் போது காயம் பட்ட நபரை 07.01.2014 காலை 4.00 மணியளவில் பரத் என்பவர் சிகிச்சைக்காக கொண்டுவந்து சேர்த்தார் என்று

சொல்லியுள்ளார் என்றால் இல்லை. காயம் பட்ட நபரை பரத் என்பவர் தான் சிகிச்சைக்ககாக கொண்டு வந்து சேர்த்தார் அவரை நீங்கள் விசாரணையும் செய்துள்ளீர் ஆனால் அந்த விபரத்தை இந்த வழக்கில் தெரிவித்தால் அது இந்த வழக்கிற்கு பாதகமாக அமையும் என்ற காரணத்தினால் நீங்கள் அதை மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறீர் என்றால் சரியல்ல. டாக்டர் சுப்பையா மருத்துவமனையில் வழங்கிய அ.சா.ஆ 12 விபத்து பதிவேட்டில் பரத் என்பவர் தான் சிகிச்சைக்கு கொண்டுவந்து சேர்த்தாக உள்ளது என்றால் சரிதான். காயம் பட்ட நபர் 24.01.2014 அன்று மருத்துவமனையில் இருந்து சிகிச்சை முடிந்து விடுவிக்கப்பட்டுள்ளார் என்ற விபரம் உங்கள் விசாரணையில் தெரியவரவில்லை என்றால் விபத்து பதிவேட்டை பார்த்தால் சொல்லமுடியும். காயம் பட்ட நபர் இறுதியாக மருத்துவம் எடுத்துக்கொண்ட மருத்துவரால் தான் காயத்தின் தன்மை பற்றி காயச்சான்றிதழ் வழங்க முடியும் என்றால் சரியல்ல. 24.01.2014 க்கு பின் காயம் பட்ட நபர் சிகிச்சை ஏதாவது எடுத்தாரா என்று உங்கள் விசாரணையில் தெரியவந்ததா என்றால் ஆம் தெரியவந்தது 24.01.2014 க்கு பின் திருநெல்வேலி ஜெயராஜ் அன்னபாக்கியம் மிஷன் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதாக தெரியவந்துள்ளது. மேற்படி மருத்துவமனையில் சிகிச்சை அளித்த மருத்துவரை நீங்கள் விசாரிக்கவில்லை என்றால் அதற்கு அவசியம் ஏற்படவில்லை என்கிறார். நீங்கள் சொல்வது போல் சம்பவ இடத்திற்கு செல்லவேயில்லை மேலும் நீங்கள் சொல்வது போல் சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரிவரைபடம், கைப்பற்றுதல் மகஜர் போன்ற ஆவணங்களை தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக நீதிமன்றத்தில் நீங்கள் சமர்பித்துள்ள ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்காக உங்கள் காவல் நிலையத்தில் வைத்தே நீங்கள் தயார் செய்த

ஒன்று என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிரி உங்களிடம் எந்த வித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை அதனடிப்படையில் சான்று பொருட்கள் எதுவும் இந்த வழக்கில் கைப்பற்றபடவில்லை என்றால் சரியல்ல. உங்களால் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சான்று பொருட்கள் இந்த வழக்கிற்காக உங்களால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எந்த ஒரு சாட்சியையும் விசாரணை செய்யாமலயே ஒரு தலை பட்சமாக இந்த எதிரிகளின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு முன்விரோதமாக காட்டப்படும் வழக்கு குற்ற எண். 492/2012ல் காயம்பட்டதாக சொல்லப்படும் அ.சா2 (சமுத்திரம்) குற்றவாளி அல்ல என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை -</u>** இல்லை.

**ஒம்/-S.பிரியா,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**